செ.வெ.எண்: 143

# பத்திரிகைச்செய்தி

நாள்: 27/02/2017

தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ள அம்மா திட்டத்தின் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம் 03.03.2017 வெள்ளிக்கிழமை அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கல்குளம் வட்டத்தில் கீழ்கண்டவாறு நடைபெறவுள்ளது.

கல்குளம் வட்டத்தில் தும்பக்கோடு "ஆ" வருவாய் கிராமத்திற்கு மட்டும், அரசு உயர்நிலைப் பள்ளி, திருநந்திக்கரையில் வைத்து காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்த அம்மா திட்டம் மூன்றாம் கட்ட சிறப்பு முகாமில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட சமூக பாதுகாப்பு திட்டங்கள், பட்டா மாறுதல், உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், குடும்ப அட்டை, வருவாய் வட்டாட்சியர் அதிகாரத்திற்குட்பட்ட நில தாவாக்கள், குடிநீர் மற்றும் சாலை வசதி போன்ற பொதுவான மனுக்களை பொதுமக்கள் அளித்து தீர்வு காணலாம் எனவும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துக் கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி),
கன்னியாகுமரி மாவட்டம்.

27.2.17